**செய்தி வெளியீடு எண்:262** **நாள்:11.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ்
சேலம் மாவட்டத்தில் 1,100 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு,
மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று **(11.6.2021)** சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், **உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை**யின் கீழ், சேலம் மாவட்டத்தில் **1,100** மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, அவற்றில் **10** மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையில் ‘‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’’ என்ற நிகழ்வின் மூலம் பெற்ற மனுக்களுக்கு, **100** நாட்களுக்குள் தீர்வு காணும் பொருட்டு, ‘‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலரிடம் **09.05.2021** அன்று அனைத்து மனுக்களும் ஒப்படைக்கப்பட்டன. சுமார் **4.40** இலட்சம் மனுக்கள் இத்துறையில் பெறப்பட்டன. பெறப்பட்ட அனைத்து மனுக்களும் மாவட்ட வாரியாக, வகை வாரியாக பிரிக்கப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை (TNeGA) மூலம் பராமரிக்கப்படும் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மனுவும் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் தனித்தன்மையுடன் கூடிய அடையாள எண் வழங்கப்பட்டு, அடையாள எண்ணுடன் கூடிய குறுஞ்செய்தி (SMS) மனுதாரருக்கு அனுப்பப்படுகிறது. மனுக்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அதன் உண்மை தன்மைக்கேற்றவாறு தகுதியான ஒவ்வொரு மனுவும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உடனடி தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் கடந்த 18.05.2021 அன்று உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் சென்னை, திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவாரூர், தேனி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 549 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் 846 மனுக்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் கீழ் 145 மனுக்களுக்கும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சமூக நலத் துறையின் கீழ் 9 மனுக்களுக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக சேவைப் பிரிவில் 100 மனுக்களுக்கும் என மொத்தம் 1,100 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, அடையாளமாக 10 நபர்களுக்கு ஆணைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மனுதாரர்களின் விவரங்கள் – எடப்பாடி, வெள்ளாண்டி வலசைச் சேர்ந்த திரு. மா. நாகராஜ் அவர்களுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரையும், சங்ககிரி, கத்தேரியைச் சேர்ந்த திருமதி ர. சுமதி அவர்களுக்கு பசுமை வீடு கட்டுவதற்கான ஆணையையும், எடப்பாடி, கச்சுப்பள்ளியைச் சேர்ந்த திருமதி செ.நல்லமுத்து அவர்களுக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணையையும், சங்ககிரி, வைகுந்தத்தைச் சேர்ந்த திருமதி ர.சித்ரா அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவையும், எடப்பாடி, வெள்ளாண்டி வலசைச் சேர்ந்த திருமதி ர.தேவி அவர்களுக்கு தையல் இயந்திரத்தையும், மேட்டூர், ஓலைப்பட்டியைச் சேர்ந்த திருமதி ம. அரிக்கொடி அவர்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

சேலம் மாவட்டத்தில் சாலை மேம்பாடு, குடிநீர் வசதி, சுகாதார வளாகம் போன்ற அடிப்படை வசதி வேண்டி வரப்பெற்ற பொது கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் துறைகளுக்கு ஒப்புதல் ஆணைகளை இன்று வழங்கினார்கள்.

வீரபாண்டியைச் சேர்ந்த திரு.கே.கணேசன் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ரூ.70.75 இலட்சம் மதிப்பீட்டில் ராக்கிப்பட்டி ஊராட்சியில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு அனுமதி ஆணையையும், ஆத்தூரைச் சேர்ந்த திரு.பொன்னுசாமி அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் வளையமாதேவி ஊராட்சி பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்தும் பணிக்கான அனுமதி ஆணையையும், எடப்பாடியைச் சேர்ந்த திருமதி ஜெயந்தி கைலாசம் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கான அனுமதி ஆணையையும், எடப்பாடி கொங்கணாபுரத்தைச் சேர்ந்த திரு.புகழேந்தி அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் எருமைப்பட்டி ஊராட்சியில் சமுதாய சுகாதார வளாகம் அமைக்கும் பணிக்கான அனுமதி ஆணையையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதேபோல், இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மனுக்கள் அனைத்தையும் முறையாக ஆய்வு செய்து, விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென இத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது, எடப்பாடி சட்டமன்ற தொகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி திரு. மா. நாகராஜ் அவர்கள் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை பெற்றுக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்வில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி. செந்தில்பாலாஜி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர். பார்த்திபன்,

டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, டாக்டர். செ. செந்தில்குமார், திரு.ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இரா. இராஜேந்திரன், திரு. இரா. அருள், திரு. எஸ். சதாசிவம், ‘‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ துறையின் சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**